பதிவெண்: எம். 7030.

குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 11-11-58 செவ்வாய் | இசை: 24

வெற்றி நமக்கென்று கொட்டடா முரசு

எங்குப் பிறப்பினும் தமிழன் தமிழனே
இங்குப் பிறப்பினும் அயலான் அயலானே

(எங்கு)

செங்குருதி தன்னில் தமிழ்த்தன்மை வேண்டும்
சிறிதும் அயலான் கலப்பின்மை வேண்டும்

(எங்கு)

சிங்கக் குகையில் நரிக்கிடம் தந்தோம்
செந்தமிழ் நாட்டின் உரிமை இழந்தோம்!
பொங்கும் உணர்வால் எழும்தமி ழரசு
போர்தொடங் கிற்றுக் கொட்டடா முரசு

(எங்கு)

ஆரியனுக்குப் பிறந்தானும் ஆரியன்
அவனே வெறுப்பானே செந்தமிழ்ச் சீரியன்
வீரத் தாலெழுந் ததுதமி ழரசு
வெற்றி நமக்கென்று கொட்டடா முரசு

(எங்கு)

ஆண்ட தமிழில் ஆரியம் சேர்த்தார்
ஆயினும் தமிழர் நெறிகண்டு வேர்த்தார்
மூண்டுணர் வால்எழுந் ததுதமிழரசு
முற்றும் வெற்றிஎன்று கொட்டடா முரசு

(எங்கு)

இறகு தமிழ்! பேணு ஆங்கிலம்!

எங்க ளூரில் இருப்பவர்கள்
இற கென்று சொல்வார்
இற கென்ருல் மைதொட்டே
எழுதுகின்ற இறகு!

உங்களூரில் பேணுஎன்றே
உளறுவார்கள் வீணுய்
உன்தமிழ்தான் இருக்கையிலே
ஆங்கிலப் பேர் ஏனே!

என்னிடத்தி லே, மையூற்
றிறகும் உண்டு பாராய்!
எடுத்தவுடன் மை தொடாமல்
எழுதலாமே சிராய்!

முன்னெல்லாம் வாத்திறகால்
எழுதிக்கொண்டி டிருந்தார்
பின்னல்தான் இரும் பிறகும்
இந்த மையூற் றிறகும்!

நாம்தமிழர்! நம்பொருளை
நம்தமிழால் சொல்வோம்
நாம்தமிழர்! எப்போதும்
நம்தமிழே கற்போம்!

காம்பினிலே கண்ணெதிரே
கைக்கெட்டும் நல்ல
மாம்பழம் இருக்கையிலே
வேப்பம்பழம் ஏனே!

புதுச்சேரி, தி. வ. ஆ. கசூஅகூ ஐப்பசி உசூ.

புதுவை மக்கள் துடிப்பு.

நம் அச்சகத்தின் குறட்டில் ஓர் அரிசிக் கடை இருக்கிறது. அரிசிக்கடையின் அண்டையில் தான் நாம் உட்கார்ந்து இரங்கத்தக்க காட்சியைக் கண்டு வருந்துகின்றோம். நான்கு நாளைக்கு முன் ஒரு ரூபாய்க்கு (புதுவைப் படி) ஒன்றே முக்கால்படி அரிசி கிடைத்தது. அப்போதே அழுது கொண்டு தான் வாங்கிச் சென்றார்கள்.

இன்று ஒரு ரூபாய்க்கு ஒன்றரை படியரிசி ஆகிவிட்டது. பிள்ளைகுட்டியைப் பெற்ற ஏழைத் தாய்மார்கள் அழாமல் வாங்கிக் கொண்டு போகின்றார்கள் ஏன்? அழவும் அவர்கள் வலியிழந்து விட்டார்கள்.

''காரைக்கால் விளைச்சல் புதுவைக்கே விற்கப்பட வேண்டும்''—நம் ஐகமிஷனரின் இந்த ஒருசொல் புதுவை வட்டார மக்களின் வயிற்றில் பாலை ஊற்றும்! காலந் தாழ்த்த வேண்டாம் என்று நம் ஐகமிஷனரைக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

காரைக்கால் நிலக்கிழார்க்கும் இதில் இரக்கம் இருக்க வேண்டும். புதுவையின் பசிப் பிணியைப் போக்குவதில் அவர்கட்கு அக்கரை இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றோம்.

நாம் ஆர்லிக்ஸுக்கு அழவில்லை, ஒவல்டின்னுக்கு ஆவல் கொள்ளவில்லை. பணக்காரர் சிலருக்கு வேண்டும் அவை. அதோ இன்றும் 9—8—0 ரூபாய்க்கே விற்றுக்கொண்டிருக்கிறார்கள். கொள்ளையடிக்கட்டும். நாம் கவலைப்படவில்லை, நாம் கேட்பதெல்லாம் புதுவை வட்டார பெரும் பான்மை ஏழை மக்கட்கு இன்றியமையாது வேண்டப்படும் அரிசி.

எல்லாப் பண்டமும் விலையேறிவிட்டது மக்கள் துடிக்கின்றார்கள்! அந்தத் துடிப்பை அவர்களால் அடக்க முடிகிறது. ஏன்? அரிசி நயத்தால், வடித்துத் தண்ணீர் ஊற்றி, உப்பிட்டு உண்டு உயிர் வாழலாம் என்று அவர்கள் எண்ணுகிறார்கள்.

புதுவை வட்டார மக்கட்குத் தேவைக்குப் போராடும் ஆற்றல் இல்லை. ஆனால் தக்க நேரத்தில் பழி வாங்கிவிடுவார்கள்.

இன்றைய ஆட்சியாளர் மக்களின் ஆதரவை எதிர் பார்க்கும் நிலையில்தான் இருப்பதாக எண்ணுகின்றோம். அவர்கள் என்ன செய்து விடுவார்கள் என்று நினைத்தவர்களின் நிலை, மண்ணுன வரலாற்றுச் சுவடி மிகப் பெரிது!

இதை நாம் மக்கள் தலைவர்கட்குச் சொன்னோம்! மக்களின் இன்றைய தேவைக்குப் பாடுபடுவதே முதல் வேலை. தேர்தல் அன்று!

அரையாண்டு சந்தாத் தொகை
கட்டிய உறுப்பினர்கள்
கட்டிய தொகை 21-11-58
இசை இருபத்தாறுடன்
முடிவடைவதால்
தங்கள் தங்கள் உறுப்பினர் ரசீதைப்
புதுப்பித்துக்கொள்ளவும்.

—அமைச்சர்

பிசிராந்தையார்

தொடர் நாடகம்

அரசன்: குற்றத்தை உணர்ந்தீர்கள் அதற்காக வருந்துகின்றீர்கள் அதனால் திருந்திவிட்டீர்கள்.

உங்களை விடுதலை செய்கிறேன். உயிர்விட எண்ணுகிறீர்கள் வேண்டாம். பச்சைக்கிளியை இழந்து வருந்தும் பாண்டியநாடு நல்லஉள்ளம் படைத்த உங்களையுமா இழக்க வேண்டும்.

பாவேந்தரே, இந்தவழக்கின் நினைவாக நீவிர் பாண்டிய நாட்டுக்குச் சொல்லவேண்டிய அறிவுரை இருந்தால் பகர்ந்தருள வேண்டும்.

பிசிராந் உண்டு! உண்டு! எல்லாரும் நல்லவராய் இருந்தால்மட்டும் போதாது. எல்லாரும் செல்வராய் இருந்தால்மட்டும் போதாது மற்றும் இருக்கவேண்டியது என்ன? எல்லாரும் வல்லவராயும் இருத்தல் வேண்டும்.

வாழ்க பாண்டியன் அறிவுடைநம்பி! வாழ்க பாண்டியநாட்டு மக்கள்! வாழ்க அறம்! வாழ்க தமிழ்!

(குற்றவாளிகள் வருத்தத்தோடு அவையத்தாரைப் பணிந்து செல்கின்றனர்கள்.)

காட்சி கரு.

இடம்: *அரண்மனை உணவுவிடுதி.*

காலம்: *தொடர்ச்சி.*

உறுப்பினர்: *அரசியார், அரசர், பிசிராந்தையார் தோழி, மேற்படியார்.*

காட்சித்தலைப்பு:

அரசியும் குற்றவாளி.

நிலை: *சிற்றுண்டி அருந்த உட்கார்ந்தார்கள். பணிப்பெண்கள் அப்பங்கள், பழங்கள் கொண்டுவந்து வைத்துக்கொண்டிருக்கின்றனர்கள்.*

அரசி: பாவேந்தர் இந்த வழக்கின் நினைவாக வெளியிட்ட அறிவுரை மிக்க நன்று. ஆனால் பாவேந்தரின் உள்ளத்தில் மறைந்துள்ள ஒரு கருத்துப் பற்றி என் ஐய வினா!

இறந்த பச்சைக்கிளியும் ஒரு குற்றவாளி என்பது உங்கள் கருத்தா?

பிசிராந்: அவள்மட்டுமா? அரசரும் நானும் குற்றவாளிகளே! என்ன?

தன்னைக் காத்துக்கொள்ளும் ஆற்றல் ஒவ்வொருவனுக்கும் தேவை. ஒவ்வொருத்திக்கும் தேவை. அந்த ஆற்றலை நாம் மக்களுக்கு உண்டாக்கினோமா?

படுத்திருந்தவளைத் திடீரென்று குத்தினான் மான்வளவன். ஒருகுத்து எதிர்பாராதது! மறுகுத்தைத் தடுத்துக்கொள்ளத்தக்க ஆற்றல் அவளிடம் இல்லை. இருந்தால் தெரியும் சேதி! தன்னைக் காத்துக்கொள்ளாதவள் தவறு செய்தவள்தான்! ஆதலால்அவளும் குற்றவாளிதான்!

அரசி: அரசர் குற்றவாளி! நீங்கள் குற்றவாளி! பச்சைக்கிளி குற்றவாளி ஒருவகையில் இதுசரிதான். இதில் ஒருவியப்பு என்ன எனில், நான்தான் குற்றமற்றவள்! இல்லையா?

தோழி: அப்படிச் சொல்லும் அரசியாரும் குற்றம் புரிந்தவர்தாம் என்ன? இந்த வழக்கில், தகவல் தெரிந்தவர்கள் தெரிவிக்கவேண்டும் என்று அவையத்தார் சொன்னபோது தெரிந்ததை அவரவர் சொன்னார்கள். அரசியார் தெரிந்ததைச் சொல்லவே இல்லை.

அரசர்: அப்படியா? அதென்ன தோழி?

தோழி: பச்சைக்கிளியின் உடல் அரண்மனையில் ஒருபுறம் வைக்கப்பட்டது. பெண்டிர் அனைவரும் கண்டு துடித்து அழுதார்கள்! அரசியாரோ பாண்டியநாட்டுப் பச்சைக்கிளியே என்று சொல்லி அழுதார்கள். இதனால் பச்சைக்கிளி இன்னார் என்பது அரசியார்க்குத் தெரிந்து தானே இருந்தது?

அரசர்: தெரிந்ததை மறைத்தது குற்றமே! இதற்கு என்ன சொல்லுகின்றாய் நீ?

அரசி பச்சைக்கிளியின் சிதைந்த உடலைப்பார்த்தேன். அதற்குமுன் அவளை நான் பார்த்ததில்லை. ஆயினும் பாண்டிய நாட்டுப் பச்சைக்கிளியே என்று கூறிப் பதைத்ததுண்டு. ஏன் நான் பச்சைக்கிளியே என்று பகர்ந்தேன்? காரணம் கூறுகின்றேன்.

நாடகத்துள் நாடகம்

இடம்: *அதே இடம்.*

காலம்: *சில திங்களின் முன்பு.*

உறுப்பினர்: *அரசி, தோழி, பிசிராந்தையார்.*

காட்சித் தலைப்பு:

பாண்டிய நாட்டுப் பச்சைக்கிளி

நிலைமை: *இதுபோலவே, சிற்றுணவு அருந்துமுன் அரசியின் தோள் மீது இருந்து கொஞ்சும் கிளியை நோக்கிப் பிசிராந்தை யார் மகிழ்ச்சி முகம் காட்டினார்.*

அரசி: பச்சைக்கிளியைப்பற்றிப் பாடினால் தான் உங்கள் உணர்வு முற்றுப்பெறும்.

பிசிராந்: பச்சைக்கிளிக்குத் தனியழகு ஒன்றும் வந்துவிடவில்லை.

அரசி: பச்சைக்கிளி அல்லாமல் எனக்கு எந்தச் சிறப்பும் உண்டாகிவிடவில்லை.

பிசிராந்: பாண்டிய நாட்டு அரசியர்க்கா தனிச் சிறப்பில்லை?

அரசி: பச்சைக்கிளியைப் பிரிந்த பாவைக்குச் சிறப்பேது?

பிசிராந்: அரசிக்கும் கிளிக்கும் ஆகுமாறு பாடி விடுகின்றேன்.

வேண்டிய போது கனிஅமு துண்ணுமாம்
[வெய்யபசி
தூண்டிய போது தமிழ்க்கற்கு மாம்தனி
[யேவிரும்பி
ஈண்டிய மன்னவன் தோள்மீது வாழுமாம்
[யார்க்குவரும்
பாண்டிய நாட்டுப்பச்சைக் கிளிக்கே யுள்ள
[பாக்கியமே

அரசி: கிளி என் தோளில் வாழ்வது. நான் மன்னவர் தோள்மீது வாழ்பவள் நன்று! மிக்க இனிமை "பாண்டிய நாட்டுப் பச்சைக்கிளி" அருமையான சொற்றொடர். இதை நான் மறக்கவே மாட்டேன்.

(முற்றிற்று)

அரசி: அந்த நினைவாகத் தான் சிதைந்த பெண்ணுடலைப் பார்த்தபோது அவ்வாறு சொல்லி அழுதேன்.

பிசிராந்: எல்லாரும் குற்றவாளிகள். சரியான தண்டனை கொடுக்க எண்ணுகின்றேன். அரசர் எண்ணம் என்ன?

அரசர்: தீர்ப்பளிக்க வேண்டுகின்றேன்.

பிசிராந்: இங்குத் தட்டில் படைத்துள்ள பண்ணியங்கள் பழங்கள் அனைத்தையும் ஒன்று விடாமல் அருந்திவிட்டுச் சுவை நீரையும் வைக்காமல் குடிக்கவேண்டும். இடையில் பேசக்கூடாது.

உறுப்பினராக...

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8—50.
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

தனி இதழ் வேண்டுவோர் 0-15 (பதினைந்து காசு) அஞ்சல் தலைகள் அனுப்புக.

என்மீதிலே குற்றம் இல்லை!

ல. கு. கிருஷ்ணன்

தாய் கேள்வி:—

என்னடி கள்ளி என்னேரமும் அந்த
ஈனப் பயலோடே பேச்சு? — கண்டோர்
எங்கெங்குமே கூடி பேசுகின்றூர் ஊரார்
எல்லாம் சிரித்திட லாச்சு!

தண்ணீர் தடத்திலும் திண்ணை யிலுமவன்
தன்னைக் கண்டாலென்ன சாடை — இது
பெண்களுக் கேற்ற நடக்கையல்ல கன்னிப்
பெண்ணடி நீவெட்கக் கேடே!

வீட்டு வேலையிலும் நாட்டமில்லை. சோற்றை
வேப்பங் காயாய் மதித்திட்டாய் - உனைக்
கேட்டவரிச் சொல்லைக் கேட்டுவிட்டால் உன்தன்
கதியென்ன ஏன்மதி கெட்டாய்!

மகள் விடை:—

மாலைவேளை யொருநாள் துணையின்றி நான்
மகிழ்வுடன் நீர்கொண்டு வந்தேன் - வருங்
காலையிலே மலர்ச் சோலையிலே வீசி
காலணி பேச நடந்தேன்!

முல்லைப் புதரிலக் கள்வனி ருந்தேனே
முறுவலித்தான் நானும் பார்த்தேன் — அவன்
நில்லென்று சொன்னதுமில்லை நானேநின்றேன்
நேருக்கு நேரெனைப் பார்த்தான்!

ஆடை மறைத்தயென் அங்க மெலாமவன்
அகத்துள் எப்படி போச்சோ - அவன்
தேடியனைத்தையும் சித்திரம் போல் சொந்தம்
ஆக்கிக்கொண்டான் வெட்கம் போச்சே!

பழிக்குப் பழிவாங்க அப்பாவியையும் நெஞ்சுள்
பதித்துக் கொண்டேன் என்னதப்போ — சும்மா
இழித்தென்னைப் பேசுவோர் இதற்கென் பதில்
[சொல்வார்
இவர்கள் செய்தால்மட்டும் ஒப்போ!

நெஞ்சுளன்று முள்ளான் நேரில் வந்தாலன்றி
நினைவு தவறுதேன் அம்மா! - அவன்
கொஞ்சும் மொழியென்ன மாயமோ தள்ளக்
கூடுதில்லை பழி சும்மா!

என் மீதிலே குற்றம் இல்லையவனுக்கே
ஏற்ற புத்தி சொல்லிப்பாரும் - அவன்
உன்சொல்லிற் கஞ்சினும் என்மனம் மாருதே
இதனால் கெடுமுன்றன் பேரும்!

கந்தனும் பூனையும்

புதுவை, வித்துவான் வை. மாணிக்கசாமி

வாசலில் கந்தனும் உலவியே - ஒரு
வடையினைத் தின்றுகொண் டிருந்தனன் - அந்த
வாசத்தி னுல்ஒரு பூனையும் - கண்டு
வந்ததாம் அவ்விடம்; கந்தன்மேல் — தன்
பாசத்தை வைத்தது போலவே — அவன்
பக்கத்தில் சென்றுதன் முதுகினைப் — பெரும்
ஆசையால் வில்லென வளைத்தது - பின்
அவனையே சுற்றியும் வந்ததே.

தன்மேலே அன்பினைக் கொண்டதால் — அது
தன்னிடம் வந்ததென் றெண்ணியே — அவன்
தன்னரும் வடையினில் பாதியைப் — பிட்டுத்
தந்தனன் பூனையும் கௌவியே - பின்
தன்வழி பார்த்தது செல்லவும் — கந்தன்
தானுமே ஏமாந்து போனதாய்
அன்றவன் கண்டனன் ஆகையால் - தம்பி
ஆரையும் எளிதினில் நம்பாதே.

★ ★ ★ ★

குயிலுக்கு...

பின் கண்ட ஊர்களில்
விற்பனையாளர்கள் தேவை.

செங்கற்பட்டு,	மதுராந்தகம்.
தாம்பரம்.	செஞ்சி.
விழுப்புரம்.	பண்ணுருட்டி,
திருக்கோவிலூர்.	கோவில்பட்டி,
காரைக்குடி,	குடியாத்தம்.
அரியலூர்,	விருதுநகர்,
ஈரோடு,	வலங்கைமான்.

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

புருவம்

புரை, புரைவு, புரைவம் அனைத்தும் உயர் வின்பெயர். இஃது புருவம் என மருவிற்று. உயர்இடம், மேடு என்பன கொள்க. முகத்தில் குறிப்பிடத் தக்கதாகிய கண்ணுறுப்பினும் உயர்ந்திருப்பது என்ற காரணம் பற்றி வந்த பெயர் "புணர்ப்புள்ளுறுத்த புரைபதம்"

(பெருங்கதை இலாவணகாண்டம்)

இதில் புரை உயர்வு குறித்தது காண்க.

"விரைவிரியார் புரைவுறப் புணர்த்த"

(பெருங் கதை உஞ்சை)

இதில் புரைவு உயர்வு குறித்தது காண்க.

இனி, புரைவு அம்சாரியை பெற்றுவரும். மன்று மன்றம் என வந்தது போல். எனவே புரை, புரைவு, புரைவம் இவை உயர்ந்த இடத்துக்கு ஆம் போது ஆகு பெயர் எனப் படும்.

எனவே புருவம் தூய தமிழ்ச்சொல்லே எனக் கடைப்பிடிக்க.

வாரி

கம்பராமாயணத்துக்கு உரை எழுத வந்த வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரி தமிழ்ச் சொற்களையெல்லாம் வேண்டுமென்றே வட சொற்கள் என்று காட்டி மகிழ்பவர். அதில் வாரி என்பதும் ஒன்று. பாலகாண்டம் ஆற்றுப் படலம் 3-ம் செய்யுள் உரையிலும் மேலும் பல இடங்களிலும் வாரி, இலக்கணையாய்க் கடலைக் குறித்தது ஆதலின் அது வடசொல் என்று கூறியுள்ளார்.

வார் என்றாலே தமிழில் நீருக்குப் பெயர். நீண்டு ஓடுதல் என்ற காரணப்பொருளுடையது. அதுவே வார்தல், வார்ந்தது என்றெல்லாம் வினைப்பெயர் முதனிலையாய் வரும். எனவே வார் என்ற முதனிலைத் தொழிற் பெயருக்குப் பெருகுதல் ஒழுகுதல், என்ற பொருள் உண்டு. அந்த வார் என்பது வினைமுதற்பொருள் இறுதி நிலையாகிய இகரம் பெற்று வாரி என்றாயிற்று. வாரி என்பதற்கு நீர்ப்பெருக்கு நீர் ஓட்டம், வெள்ளம் என்றெல்லாம் பொருள்பட்டுத் தமிழிலக்கியங்களில் வரும். இதுவே ஆகு பெயராய்க் கடலையும் உணர்த்தும். ஊர் வாரி நன்செய் எனப் பேச்சு வழக்கில் வருவதும் அனைவரும் அறிந்த தொன்றாம். எனவே வாரி என்பது தூய தமிழ்க் காரணப்பெயர் என்க இனி.

வாரிதி

வார் என்பது முதனிலை தி, தொழிற்பெயர் இறுதிநிலை இகரம் சாரியை ஆகவே வாரிதி ஆயிற்று இது தொழிலாகுபெயராய்க் கடலை உணர்த்தும். வாரிதி என்பதை வடமொழி என்பவர், தமிழினின்று அது எடுக்கப்பட்டது என்று உணர வேண்டும்.

வாரி என்பதற்குக் கூறியது கொண்டு வாரிதியும் தூய தமிழ்க் காரணப்பெயரே என்று கடைப் பிடிக்க.

தாமரை

இதைத் தாமாசம் என்ற வடசொல்லின் சிதைவு என்று தமிழர்க்குக் குல்லாய் தைப்பர். மரு என்பது தமிழில் மணத்துக்குப்பெயர். அது ஐ என்ற பெயர் இறுதி பெற்று "முற்றும் அற்று ஒரோ வழி" என்ற சட்டத்தால் மரை என்றாயிற்று. இதுவும் முதலுக்கு ஆவதால் பண்பாகு பெயர் என்பர்.

இனி, மரை என்பது தாம்பு என்பதன் கடைக்குறையான தாம் என்பதை முன்னே பெற்றுத் தாமரை ஆனது.

எனவே (தாம்+மரை) தாமரை என்பது நீண்டதும், மணமுடையதுமான ஓர் கொடியின் பெயரைக் குறித்த காரணப்பெயர்.

இது தாமரை மலரைக் குறிக்கும்போது முதலாகுபெயர் ஆம். இது செம்மை அடை பெற்றுச் செந்தாமரை என்றும், வெண்மை அடைபெற்று வெண்டாமரை என்றுவரும்.

தாமரை தூய தமிழ்க் காரணப்பெயர் என அறிந்து உவக்க.

பார்ப்பனரும் தமிழும்!

— பார்வேந்தன் —

பெருந்தேவனுர் பாடலிற் குறித்தபடி வேற் படையும் கோழிக் கொடியும் முருகனுக்கு உரியன வென்பது வேல்கெழு தடக்கைச் சால் பெருஞ் செல்வ (திருமுருகு 265) எனவும் "கோழியோங் கிய வென்றடுவிறற் கொடி" (திருமுருகு. 38) என வும் வரும் சங்கநூற் குறிப்புக் களாற் புலனுகும் ஒருமுகமும் இருகையுமுடைய முருகன் திருவுரு கி. பி. இரண்டாம் நூற்ருண்டிலேயே தமிழ் நூலா ராய்ச்சியால் இனிது புலனுகின்றது. முருகப் பெருமான், தன்னை அன்பினுல் வழிபடும் அடியார் களின் முன்தோன்றி அருளுங்கால் அவர்கள் அச்ச மின்றிக் கண்டு வழிபடுதற் கேற்றவாறு தன் தெய் வத்தன்மையை யுள்ளடக்கிக் கொண்டு மக்கள் வடிவில் இளையோனுக வந்து அருள் புரியுமியல் பினையும் உடையன் என்பதனை,

அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்து இளநலங் காட்டி
(திருமுருகு 289, 290)

என்ற தொடரால் நக்கிரனுர் குறிப்பாக அறி வுறுத்தி யுள்ளார்.

இவ்வியல்பினை இளங்கோவடிகள் சிலப்பதி காரத்தின் கண் சிறிது வெளிப்பட விளக்கிய திறம் இவண் கருதத் தகுவதாகும். களவொழுக்கத்தில் இரவுக்குறியில் அடிக்கடி வந்து செல்கின்ருன் தலை வகன். அவனை நோக்கித் தோழி கூறுவதாக அமைந்தது.

கடம்பு சூடி யுடம்பிடி யேந்தி
மடந்தை பொருட்டால் வருவதிவ் வூர்
அறுமுக மில்லை அணிமயி லில்லை
குறமக ளில்லை செறிதோ ளில்லை
கடம்பூண் தெய்வமாக நேரார்
மடவர் மன்றிவிச் சிறுகுடி யோரே

என வருங் குன்றக்குரவைப் பகுதி தலைவன் தலைவியைப் பெறுதல் கருதிக் கடப்பமலர் மாலையை யணிந்து கையில் வேற்படையைத் தாங் கிக் கொண்டு இரவில் இவ்வூர்க்கண் அடிக்கடி வந்து செல்வது கண்டார் நின்னை முருகனெனக் கருதி ஆராயாது விடுவர் என்னுங் கருத்தினுலென அறிகிறேன். கடவுளாகிய முருகன் நின்னைப் போன்று ஒரு முகமும் இருகையும் உடைய தனது பழைய திருமேனியாகிய இளைய வடிவுடனும் வருதல் கூடும் என்னும் உண்மையினை யறிந்து கொள்ள மாட்டாது ஆறுமுகம் பன்னிரண்டு கை களும் கொண்ட வடிவுடனன்றி முருகன் இத் தகைய வடிவில் இராது எனக் கருதும் அறியாமை யுடையோர் இச்சிறு குடியோராயின் நீ இங்ஙனம் வருங்கால் உனக்கு ஆறுமுகங்கள் இல்லை யென்றும் அழகிய மயிலாகிய ஊர்தி இல்லைஎன்றும், பக்கத்தில் அழகிய வள்ளி நாய்ச்சியார் இல்லை யென்றும் பன்னிரண்டு தோள்கள் இல்லை யென்றும் கூறி இவ்வூரார் வழிபாட்டினை ஏற்றுக்கொள்ள வந்த முருகனுக நின்னை உடன்பட மாட்டார்கள்; எனத் தோழி தலைவனுக்கு அறிவுறுத்தும் முகத்தான் இக் களவொழுகத்தினை விட்டுத் தலைவியை மணந்து கொள்ளத் தூண்டினுள் என்பது மேல் எடுத்துக் காட்டிய அடிகளின் பொருளாகும்.

இவ்வாறு தலைமகன் முருகனுக்குரிய கடப்ப மலர் மாலையை அணிந்து கையில் வேற் படையினை ஏந்தி வருதற்குக் காரணம் தன்னை கண்டார் மணங் கமழ் தெய்வத்து இளையோனுகிய முருக னென்று எண்ணி விலக்கா திருப்பர் என்பது கருதியே என்பதனை, தலைமகன் கடம்பு சூடி உடம் பிடி ஏந்தி தன்னைக் குமரனென்று பிறர் கருத வந்த காரணம் பண்டைத் தன் மணங்கமழ் தெய்வத்து இளநலங்காட்டி என்ருர் ஆதலால் இவ்வுரைக் குறிப்பால் அரும்பதஉரை யாசிரியர் இனிது விளக்கி உள்ளார்.

அன்றியும் ஆறுமுக முடைய வடிவமொன்றே அக்காலத்து முருகனுக்குரிய வடிவமாய் இருப்பின் அவ்வடிவமில்லாமை கருதித்தலைவனை முருகனென உடன்படாத சிறு குடியோரை மடவர் மன்ற இச் சிறுகுடியோரே எனத் தோழி இகழ்ந்து உரைத்த தாக ஒரு சிறிதும் இயல்பு இல்லாமை அறிக.

ஒருமுகமும் இருகையுமுடைய முருகன் திரு உருவமே சங்க காலத்திற்கு முன்னுள்ள பழைய வடிவமென்றும் இளங்கோவடிகள் இப்பழைய வடி வம் மக்களால் மறக்கப்படும்படி பிற்றைநாளில் புரா ணங்களில் சொல்லப்பெற்ற ஆறுமுகத்திரு மேனி யே பொது மக்கள் வழிபாட்டில் இடம் பெறத்தொ டங்கிய தென்றும் மேற்காட்டிய சிலப்பதிகாரத் தொடராலும் அதற்கு அரும் பதவுரையாசிரியர் எழுதிய உரைக்குறிப்பாலும் இனிது புலப்படுத்தப் படுதல் காண்க. இங்ஙனம் இளங்கோவடிகளும்

நச்சினார்க்கு நஞ்சா? அமிழ்தா?

கயல்விழி

வற்றாத திருநாட்டில் வழிந்தோடும் வீரத்திற்கு என்றுமே குறையிருந்ததில்லை. கைவேல்களிற்றொடு போக்கி மெய்வேல் பறித்து நிற்கும் வீரத்தையும், வினை நவின்ற பேர்யானை சினஞ் சிறந்து களன் உழக்கும் போர்க்களத்தையும், பால்மணம் மாறாப் பாலகனைப் போருக்கு அனுப்பும் மறக்குடிப் பெண்களையும், பாண்டியன் நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவன் கரிகாற் பெருவளத்தான் போன்றோரது வீரத்தையும் வரலாறுகள் நமக்கு எடுத்தோதிய வண்ணம் இருக்கின்றன.

தொல்காப்பியப் புறத்திணை இயல் முழுவதும் வீரர் மேம்பாட்டைக் கிளந்தெடுத்துக் கூறியும், அரசன் படைகளை இயக்கும் முறை, அரண் அமைக்கும் முறை முதலியவற்றோடு அறமுறை பிழையாத போரின் இன்னபிற தனிப்பெரும் பண்பையும் பாரோருக்கு எடுத்தோதிச் செல்கிறது.

இத்தமிழ்ப் புவியில் பிறந்த நாள்தொட்டு அவனை வீரனாக்குவதற்கு முறைமுறையாகப் பயிற்றுவிக்க வேண்டிய பண்பு முறைகளுக்குத் திட்டம் வகுத்து ஒரு வீரக்குடி நிறைந்த பண்புள்ள சமுதாயத்தையே உருவாக்கி இருக்கிறார்கள். ஈன்று புறந்தருதல் தாய்க்குக் கடன் என்றும், சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடன் என்றும், வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடன் என்றும், நன்னடை நல்கல் வேந்தற்குக் கடன் என்றும், ஒளிறுவாள் அருஞ்சமம் முறுக்கிக் களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடன் என்றும் வேலை முறைகளைப் பகுத்தெடுத்து வகுத்துக் கூறித் தமிழ் மகனை – வீர மகனை – உருவாக்கி இருக்கிறார்கள்.

புறநானூறு, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம் ஆகிய சங்க நூல்கள் அனைத்திலும் மேற்காட்டியது போன்ற வீரம்பற்றிய விதவிதமான விளக்கங்களைத் தெளிவுறக் காணலாம்.

இவ்வாறு வீரத்தை மையமாக வைத்துச் செம்மாந்து செல்லும் சீர்சால் இலக்கியங்கட்கு உரையெழுதப் புகுந்த பார்ப்பனர்கள் முடிந்தவரை அந்த இலக்கியங்களை இழித்தும், பழித்தும், தமிழ்க் குடியில் தோன்றிய வீரப்பெருமக்களைக் கோழையாக்கி அவர்கட்கு மாசு கற்பித்தும் உரையெழுதிச் சென்றிருக்கின்றனர்.

தொல்காப்பியம் பொருளதிகாரத்திற்கு (இளம்பூரணர் உரைக்கு) முன்னுரை எழுதிய செல்லூர்க் கிழார் இராமசாமி பிள்ளையவர்கள் வெளியிட்டிருக்கும் கீழ்வரும் பொருளுரையை எண்ணுக.

வரலாறுகள் எதையெடுத்தாலும் யாருடைய வாழ்க்கை முறைகளை ஆய்ந்துணர முற்பட்டாலும் அவைகளுள் பிற்காலக் கட்டுக் கதைகளைப் புகுத்தியும் முற்கால வழக்கில் இல்லாதனவும் பிற்கால வழக்கத்தில் வந்தனவுமாகிய பாக்களைக் கொண்டு அவர் புனைந்தனவாகக் கொண்டு காட்டியும், அவர் தம் உண்மை வரலாற்றை அறியவொண்ணாத

நக்கீரனாரும் முருகனது பழைய திருமேனி எனக் குறிப்பிட்டு விளக்கிய ஒருமுகமும் இருகையும் உடைய முருகன் வடிவம் தமிழ் நாட்டுத் தொன்மை வடிவமேயென்றும் வடமொழியில் பிற்காலத்து எழுந்த குமாரதந்திரமும் ஸ்ரீ தத்துவநிதியும் பண்டைத் தமிழ் நூல் கொள்கைக்கு மூலமாவதுபோல் ஐயங்கார் அவர்கள் எழுதியது ஒரு சிறிதும் பொருந்தாது எனக கொள்ளுதலே ஆராய்ச்சி உணர்விற்குப் பொருந்தியதாகும்'' என்று கூறுகிறார்.

மேற்கூறிய முருகன் ஆராய்ச்சி ஈண்டு எதற்கு எடுத்துக் கூறப்பட்டதெனில், தனித்தமிழ்க் கடவுள் என்று தமிழரால் வணங்கப்பட்ட ஒரு தெய்வத்தை அது பொறுக்காத பார்ப்பனர் எவ்வாறு திரித்துக் கூறுகின்றனர் என்பதை எடுத்துக் காட்டுதற்கே அன்றி வேறில்லை என்பது அறிக.

இவ்வாறே நம் பழந்தமிழ்ச்சங்க நூல்கள் பல ஆரியப்பார்ப்பனர்களால் சிற்சில இடங்களில் நச்சுக் கருத்துக்களைத் தூவப்பெற்றதாக இருக்கிறது. எனவே அவையெல்லாவற்றையும் நாம் நீக்கி நல்ல வழி நடக்கவேண்டும்.

தமிழின் மீது உண்மையான அன்புடையார் இவ்வாறெல்லாம் தமிழுக்குத் துரோகம் செய்யாரன்றோ? எனவே தூங்குகின்ற தமிழனே! சற்றே விழித்துப்பார்.

வகையில் போலி வரலாறு எழுதிய பலர் வரலாற்று முறைக்குக் கறைசெய்து போதருவாராயினர். தொல்காப்பியருக்குத் திரண தூமாக்கினியென்று புனைபெயர் சூட்டி ஆரியராக்கிய இக் கட்டுக்கதையாளர் (ஈண்டு நச்சினர்கினியர்) வேறென்ன தான் கூறுர்?

ஒய்மா நாட்டு நல்லியக்கோடன் என்னும் சிற்றரசன் செய்நன்றியறிதலும், சிற்றினமின்மையும், இன்முகம் உடைமையும், வெஞ்சினமின்மையும், அஞ்சினர்க்கு அளித்தும், வரிசை அறிந்து வரையாது கொடுத்தும், உயர்நிலை உலகம் அழிழ்தொடு பெறினும், பொய்சேண் நீங்க வாய் நட்பினைப் பெற்றும், பன்மீன் நடுவண்பான்மதி போலவும், முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும் பூத்த சுற்றமொடு பொலிந்து இனிது விளங்கினன்.

இம் மன்னவன் வேல் எறிவதில் மிக்க வல்லவனுகவும் போர்முறைகள் அனைத்தையும் எஞ்சாது கற்ற பெருவீரனுகவும் இலங்கினன் என்பதைக் கீழ்வரும் சிறுபாணுற்றுப்படை அடிகள் வெள்ளிடைமலையெனத் தெள்ளிதின் விளக்கும்.

1. தேரோர்க்கு அழன்ற வேலினை (234)
2. விறல் வேல் வென்றி (173)
3. விடுவில் வாய்வாள் (120)

இந்த மன்னனது ஊர்களுள் வேலூர், ஆமூர், எயிற்பட்டினம் என்பன சிறந்த ஊர்கள்.

இம்மன்னவன் தனக்கு உரிய வேலெறியும் ஆற்றலால் வெற்றி கொண்ட ஊராகலின் அவ்வூர் வேலூர் எனவும், வேல்நுதி.போன்ற பூக்கள் கேணிகள் எங்ஙனும் நோக்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்து பூத்துக் கிடப்பதாலும் வேலூர் எனப் பெயர் பெற்றது. இவற்றை

"திறல்வேல் நுதியில் பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூர் எய்தி"

என்னும் சிறுபாணுற்றுப் படை அடிகள் நன்கு விளக்கும்.

இது இவ்வாறிருக்க, ஆசிரியர் நச்சினர்கினியர் தனக்கே உரிய கட்டுக்கதை புனையும் வழக்கப்படி வேலூருக்கு ஒரு புராணக்கதை கட்டி, அக்கதை மூலம் ஆரியப் பண்புப்படி (அதாவது தமிழை, தமிழ் அரசரை இழித்துக் கூறவேண்டும் என்னும் அவரது முறையான கடமைப்படி) விறல்கெழு வேந்தன் நல்லியக்கோடனைக் கோழையாக்கி, பகைவர்க்கு அஞ்சி ஓடிவந்து கடவுளை வணங்கிக் கிடந்ததாகவும், பின்பு கடவுள் அவனது கனவில் தோன்றி ஒரு குறிப்பிட்ட கேணியைச் சுட்டிக் காட்டி அதில் பூத்துக் கிடக்கும் இந்தப் பூவை எடுத்து அம்பாக்கி பகைவர்மேல் விடு என்று கூறியதாகவும் அதன்படியே இவன் பூலவ வேலாக்கி பகைவர்மேற் செலுத்தி வெற்றி கொண்டதாகவும், அதனுலேயே வேலூர் எனப்பெயர் உண்டாயிற்று என்றும் கதை கூறுகிருர்.

"நல்லியக் கோடன் தன் பகைமிகுதிக்கு அஞ்சி முருகனை வழிபட்டவழி அவன் இக்கேணியிற் பூவை வாங்கிப் பகைவரை எறியென்று கனவிற் கூறி அதிற் பூவைத் தன் வேலாக நிருமித்ததொரு கதை கூறிற்று" என்பது நச்சினர்க்கினியரது கூற்று.

நல்லியக் கோடன் பகைவர்க்கு அஞ்சிய கோழையாயின் "தேரோர்க்கு அழன்ற வேலினை" எனவும் "விறல்வேல் வென்றி" எனவும் "விடுவில் வாய்வாள் உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்" என்றும் புலவர்பெருந்தகை நல்லூர் நத்தத்தனுரால் பாராட்டப்பட்டிருப்பானு?

"விடுவில் வாய்வாள்" என்பது பாடலில் பயிலப்படுகின்ற அடி. நச்சினுர்க்கினியர் தன் கருத்தைப் புகுத்துவதையே நோக்காகக் கொண்டு "விடுவில்" என்பதை "வடுவில்" என மாற்றி வைத்துக் கொண்டு பொருள் கூறுகிருர்.

"விடுவில் வாய்வாள்" என்பது வில் விடுவதில் வல்லவனும், வாய்த்த வாள்விடுவதில் வல்லவனுமாகிய நல்லியக் கோடன் என்றும் பொருள்படும்.

ஆனல் நச்சினர்க்கினியரோ இவனது வேலாற்றலை விலக்கி இவனுக்கு இழுக்குக் கற்பிக்க எண்ணி பாடலில் உள்ள விடுவில் என்னும் வினைத்தொகையை வடுவில் என மாற்றி, அதை வடு+இல் எனப் பிரித்துப் பண்புத் தொகையாக்கி குற்றமற்ற என்று பொருள் கூறுகிருர்.

பாடலில் உள்ள அடியையே தனக்கு வேண்டும்படி மாற்றிப் பொருள் கூற வேண்டுமானுல், இந்த நச்சினர்க்கினியருக்கு எவ்வளவு தெம்பிருக்க வேண்டும்?

விடுவில் வாய்வாள் உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன் நல்லியக் கோடனைக் கோழையாக்கித் தனது கதையாற்றலையும் கனவாற்றலையும் புகுத்திய நச்சினர்க்கினியர் நஞ்சா? அமிழ்தா?

வேல் நுதிபோல் பூத்த பூக்கள் மலிந்திருந்த காரணத்தாலும், வேல் எறிவதில் வல்லவனுன

நம் வீட்டிலே....

மனோ. தாமோதரன்

(பெரியாரின் போர் முரசு கேட்டுத் திரும்பு கிருன் காளை. அவனது நெஞ்சத்தில் பெரு மகிழ்ச்சி. வரும் காதலனை வரவேற்க, வட்ட நிலா முகத்தழகி வீட்டு வாயிலிலே காத்திருந் தாள். உள்ளே நுழைந்தான் காளை. வாட்ட மெல்லாம் போக்க முற்பட்டாள் முல்லை.)

முல்லை: வெற்றிதானே அத்தான்! பகலெல் லாம் காத்திருந்தேன் இப்பொழுதுதான் வரு கிறீர்கள்! அத்தான்! இன்று முழுநிலவு. மறந்து விடவில்லையே!

வீராங்கன்: முல்லை! மறக்கவில்லை! ஆனல் கடமை ஒன்று என்னைக் கை நீட்டி அழைக் கிறது!

முல்லை: என்ன அத்தான்?

வீராங்கன்: வேலை கிடைக்கும் என்ற எண்ணத்தோடு. இத்தனை நாள் எங்கெங்கெல் லாமோ. ஏறியிறங்கினேன். ஆனல் பாரி வள்ளல் பிறந்த நாட்டில் எனக்குக் கிடைத்த பதில் இல்லை என்பது. தோல்வியோடுதான் திரும்பினேன் நேற்றுவரை.........

முல்லை: அப்படியானல் இன்று......

வீராங்கன்: ஆமாம் துடித்த என் தோள் களுக்கு இன்பத்தை எதிர்பார்த்த என் இதயத் திற்கு. பயம் என்ற சொல்லைக் கேட்டறியாத என் காதுகளுக்கு. அண்டிப் பிழைக்க வந்தவர் களுக்கு அடிபணியாத என் கரங்களுக்கு— சரியான வேலை. முல்லை! நான் எங்கிருந்து வரு கிறேன் என்று நீ அறிந்தால். கேள்விகளே கேட்கமாட்டாய்! திரளானமக்கள் கூடியிருக்கத் தந்தை பெரியாரின் கட்டளைக் கேட்டுத் திரும்பு கிறேன். அவர் பேச்சு எனக்கு மூச்சளித்தது.

முல்லை: தந்தை என்ன சொன்னுர்?

வீராங்கன்: தமிழ் நாட்டின் நலன் கருதிச் சாகத் துணிந்தவர்களே! சிறை செல்லத் தயாராகுங்கள் என்ருர்! அதைக் கேட்டுத்தான் வேங்கையை வென்ற வீரன்போல மகிழ்வோடு ஓடிவந்திருக்கிறேன்.

முல்லை: மீண்டும் சிறைக்கா அத்தான்! சிறை மீண்டு ஒருதிங்கள் கூட முடியவில்லையே.

வீராங்கன்: சிறை மீண்டது காதலியரின் கனிவான முகங்கண்டு களிக்க அல்ல, மீண்டும் சிறை செல்லவே என்று நமது கடமையை நினைப்பூட்டினுர். நம்மைத் தாழ்த்த வந்த சாதி யொழிய போராடினேம். சிறை சென்ருேம். நம்மைவீழ்த்தவந்த இந்தியை ஒழிக்கப்போராடி னேம். சிறை சென்ருேம். இதோ இப்பொழுது படஎரிப்புப் போராட்டம். தாழ்ந்துவிட்ட தமிழினம் விழித்தெழப் போராட்டம். தமிழரின் வாழ்வு. செம்மைப்படும்வரை போராட்டம். தந்தை தைரியமளித்தார். தனயர்கள்—நாங்கள் நெஞ்சில் உறுதியோடு நேர்மைக்குப் போராட இதோ ஏந்திவிட்டோம் கருங்கொடியை.

நல்லியக் கோடனுல் வெற்றி கொள்ளப்பட்டதாலும் வேலூர் எனப்பெயர் பெற்றதை விடுத்து, கனவில் கடவுள் தோன்றிக் கொடுத்த பூவை வேலாகக் கொண்டு எறிந்ததால் வேலூர் ஆயிற்றென்று கூசாது கதை கட்டி விட்ட நச்சினுர்க்கினியர் நஞ்சா? அமிழ்தா?

பாடலில் பயிலப்படுகின்ற அடியை விடுத்துத் தன் பொருளுக்கேற்பச் சொல்லை மாற்றி இயற்றிக் கொண்டு உரை வகுத்த நச்சினுர்க்கினியர் நஞ்சா? அமிழ்தா?

நல்லியக் கோடனைக் கோழையாக்கியது மூலம் புறத்திணைக் கண்டு வாழ்ந்த பழம் பெருங்குடி மக்களாகிய தமிழர் அனைவரையும் கோழையெனக் கதைகட்டி விட்ட நச்சினுர்க்கினியர் நஞ்சா? அமிழ்தா?

தமிழ்மொழியையும் நாட்டையும், அரசர்களை யும், தமிழ் நூல்களையும் இழித்தும் பழித்தும் எழுதிய நச்சினுர்க்கினியரின் நாணயங்கெட்ட உரையை நீக்குக. நல்லுரை கண்டு தெளிந்து நாடற் கரிய நலத்தையும், நந்தாப் பழச்சுவையுமான தீந் தமிழ்க் காவியத்துள் நுழைக. ★

முல்லை: அத்தான்! தமிழர் வாழ்வு தழைக்கும் வரை, தமிழகத்தில் போராட்டம் நடந்து கொண்டேதான் இருக்கும் என்று நான் அறிவேன். அத்தான்! சென்ற தடவை சிறை சென்றது நீங்கள் மட்டுந்தான்; ஆனால் இத் தடவை இதயத்தை இரும்பாக்கி, எதிர்ப்புக் கணைகளைத் தாங்க நானும் தயாராகிவிட்டேன். இலங்கையிலும், இந்தியாவிலும் நம்மினம்படும் அவதியைக் கண்டு வாளாவிருப்பவன் ஆமை. இன்று ஒவ்வொரு தமிழனின் நெஞ்சமும் எரிமலையாக கொதிக்கிறது. நமக்குரிய நாட்டை நாம் பெறும்வரை தமிழ், தமிழினம், தமிழ்நாடு என்ற பற்று வீடெல்லாம், ஏடெல்லாம் இந்த நாடெல்லாம் பரவும் வரை கடல் அலைபோல் ஆர்த்தெழும், நம் நெஞ்சம் அமைதிபெறாது. பஞ்சைப்போல் படாதபாடு பட்டாவது நமது அன்னை நாட்டைப் பெற என் வயிற்றில் வளரும் சிசுகூடத் துடிக்கிறது.

வீராங்கன்: முல்லை! ஆணோடு பெண் சேர்ந்தால் இந்த உலகில் அடைய முடியாதது ஒன்றுமில்லை. வெற்றிப்பாதை நமக்காகக் காத்திருக்கிறது. இனி ஆவன செய்யவேண்டியதுதான்.

முல்லை: அத்தான்! இப்படை தோற்கின் எப்படை செயிக்கும். தந்தை பெரியாரின் கட்டளைகளை எதிர்நோக்கி எதையும் தாங்கும் இதயத்தோடு நிற்போம். அவர் சொல்லும் பாதை, நாம் செல்லும் வெற்றிப் பாதை.

(அவ்வமயம் வீராங்கனின் நண்பன் வீரன் வருகிறான்.

வீரன்: வீராங்கா! உனது வீட்டிலும் இதே நிகழ்ச்சி தானா! என் வீட்டிலும், ஒடிந்த என் உள்ளத்திற்கு ஊக்கமளித்து, என்னோடு என் காதலியும் வர இசைந்து, போராட்டநாள் என்றைக்கு என்று அறிந்து வரும்படி என்னை அனுப்பிவிட்டாள்.

வீராங்கன்: இருவர் இல்லத்தில் மட்டுமல்ல; இன்று இந்த நாடு முழுவதும்; தமிழர் நெஞ்சம் அனைத்திலும் இதே நிகழ்ச்சிதான். இனி வெற்றிப் பாதை நோக்கி விரைந்துசெல்ல வேண்டியதுதான் வாருங்கள்.

தாயும் சேயும்

பாலு

சோணாட்டின் தலை நகரான உறையூரின்கண் வதியும் அவள் ஒரு பெண்ணைப் பெற்றாள். பெற்ற நாள் தொடங்கித் தன் பெண்ணைச் சோழ இளவரசனுக்கே மணமுடிக்கப் போவதாக யாவரிடத்தும் பறை சாற்றி வந்தாள். தன் மகளிடத்தும் அடிக்கடி கூறுவாள்.

ஆண்டுகள் உருண்டோடின. இளவரசன் சோழப் பேரரசனானான். கூவத்தெரியாத அக்குயிலின் குஞ்சும் மங்கைப் பருவத்தை அடைந்தாள்.

அன்று கதிரவன் கீழ்த்திசையில் உதிக்கு முன்பே உறையூரின் தெருக்களில் மக்கள் மகிழ்ச்சியோடு நடமாடத் தொடங்கினர். எங்கு நோக்கினும் எழில்தரும் சோடனை. அவளடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. காரணம் அவள் பலநாள் எண்ணி மகிழ்ந்த சோழர் குல திலகம் நகர் வலம் வரப் போகிறான். இதை நினைத்து நினைத்து அவள் களிப்பு மிகுதியினால் கூத்தாடினாள். அவளின் உவகைக்குரிய காரணமறிந்த தாய்க்கிழவி சினந்தாள். உள்ளே அடைத்துத் தாளிட்டாள்.

அம்மலர்க்கொடி வெளியே வர வழியின்றி விம்மி விம்மி யழுதாள். முறையிட்டுத் துயரைத் தணித்துக் கொள்ளத் தோழியுமில்லை. தனிமையில் வருந்திய அவள்:

"நெஞ்சமே சிறுவயதில் என் தாய், என்னை உறையூர்க் கோமானுக்கே மணமுடிப்பேன் என்று ஆயிரம் முறை சொன்னாள். ஆனால் இன்றோ அவனைப் பார்க்கக் கூடாதென்று தடுத்துவிட்டாள், இக்கொடுமையினை நினைக்குந்தோறும் பாலை நிலத்தின் கானலை நீரென்று எண்ணி மகிழ்ச்சியோடு ஓடிவரும் விலங்கினங்கள் அடையும் ஏமாற்றமே என் நினைவிற்கு வருகிறது." என்று புலம்பினாள்.

குதலைப் பருவத்தே கோழிக்கோ மானை
வதுவை பெறுகென்றாள் அன்னை—அதுபோய்
விளைந்தவா இன்று வியன்கானல் வெண்தேர்த்
துளங்குநீர் மாமருட்டி அற்று.

(முத்தொள்ளாயிரம்)

"திரும்பவில்லை"

'பொன்னகர்' மாணிக்கம்

கார்முகிலின் குடியிருப்போ? அன்றி நீலக்
கடல்நிறத்தைப் பழிக்கின்ற குழலோ? என்றன்
பார்வையினை எண்ணத்தை வாட்டும் உன்றன்
பல்வரிசை கடல்முத்தோ? மலரெ டுத்துச்
சேர்க்கின்ற மென்விரல்கள் சொன்னால் பூத்த
செங்காந்தள் மலர்தானோ? கண்ணே! இங்கே
நேர்எங்கே உன்றனுக்கு? வதைத்தே என்னை
நிலைகலங்கச் செய்வதுதான் நன்றோ? சொல்லேன்

வண்ணமுள்ள கயலிரண்டைக் கண்ணில்
கண்டேன்;
வான்நிலவை உன்முகத்தில் கண்டேன்; இங்கே
பெண்ணுக்குப் பெண்விருப்பம் கொள்ளும் நல்ல
பேரழகை என்எதிரில் கண்டேன்; தோன்றும்
விண்ணகத்து மின்வெட்டை இடையில் கண்டேன்
வெற்றிடமோ? நூலிழையோ? அறிந்தே னில்லை!
நுண்ணிடையை வருணிக்க வார்த்தை ஏது?
நுவல்வதற்கே என்மொழியில் சொற்கள் ஏது?

தங்கநிற எழிலணங்கே! அழகே! தேனே!
சாய்ந்தாடும் பூங்கொடியே! உன்றன் மேனி
பொங்கிவரும் திங்களென்றேன்; உன்சி ரிப்புப்
பூத்திருக்கும் மலரென்றேன்! மாலை நேரச்
செங்கதிரே உன் இதழ்கள் என்றேன்; கன்னம்
செங்கரும்பே எனச்சொன்னேன்! எனைப் பிரிந்து
வெங்கொடுமைத் தீயினிலே சேர்த்தாய்; ஐயோ
வேல்விழியால் சாகடித்தாய்! மறந்தே னில்லை

வரைவிலா எழில்கொழிக்கும் உயிரே இந்த
வையகத்தில் என்னைவிட் டெங்குச் சென்றாய்?
'விரைவினிலே வந்திடுவேன்' என்றாய்; பேற்று
விடுதிசென்றாய்; வீதியிலே அலைய விட்டாய்!
கரைஎனக்குத் தெரியவில்லை; உன்றன் எண்ணக்
கடலினிலே விழுந்துவிட்டேன்; கண்ணே மீளேன்!
இரையாக விழுங்கிவிட்ட குழந்தை போடே
எங்கேயோ சென்றுவிட்டாய்; திரும்ப வில்லை!

—○—

காணேன் தோழி!

கு. சிவா. எம். ஏ.

"அல்லிதன்னி தழ்விரிக்கும் நேரந் தன்னில்
அருகிருக்கும் சோலையினில் ஆவ லோடு;
மெல்லியலே! நீகொடுக்கும் இன்ப மெண்ணி
மீறிவரும் உணர்வலையை உள்ள டக்கிக்
கல்லாத காதலெனும் கலையை உன்பால்
கற்பதற்கே காத்திருப்பேன் வாராய்!" என்றார்,
எல்லாரும் துயின்றபின்னர்ச் சென்றேன்; என்றன்
இதயம்நிறை மாரன்வரக் காணேன் தோழி!

"விண்ணூடே காதலெனும் இரத மேறி;
விளையாடிக் கற்பனையால் படைத்த ஊரில்;
பண்ணோடு பைந்தமிழில் பாடி; இந்தப்
பாரிலேயே "பரமபதம்" தன்னைக் காணக்
கண்ணான செந்தமிழே! காதல் வாழ்வே!
காத்திருப்பேன் காவினிலே கடுகி வாராய்!
எண்ணமெலாம் நீயாவாய்! என்றார், சென்றேன்
என்னாசை ஏந்தல்வரக் காணேன் தோழி!

பணிகளெல்லாம் பாங்குறவே முடித்துப் பொல்லாப்
பகற்பொழுதைப் போக்குதற்குப் பாடு பட்டே:
அணிதிருத்தி அழகுநலம் திருத்தித் துஞ்சா
அயலார்கள் ஒருவருமே அறியா வண்ணம்;
அணித்துள்ள சோலையினை அடைந்தே; என்றன்
ஆசையினில் நிறைந்திருக்கும் அவரைக் காண:
மணிக்கணக்காய்க் காத்திருந்தேன்; மாயம் ஏதோ?
மனம்வாழும் மன்னன்வரக் காணேன், தோழி!

விற்பனையாளர்க்கு...!

ஒவ்வொரு மாதமும் 10 ஆம் தேதிக்குள்
பட்டியல் தொகையை கண்டிப்பாய்
அனுப்பிவிட வேண்டும்.

அவ்வாறு அனுப்பாவிடில் அன்னார்க்கு
"குயில்" அனுப்புவது நிறுத்தப்படும்.

கொட்டுவோம்!

தமிழ்த்துளி

கொட்டுவோம்! கொட்டுவோம்! கொட்டுவோம்!
—தமிழ்க்
குடிகள் அனைத்தும் வீரமாகக்
கொதித் தெழவே வீரமுரசைக்
கொட்டுவோம்! கொட்டுவோம்! கொட்டுவோம்!

கட்டிவெல்லக் கட்டிநமது தமிழினைக்
கசக்குதென்று சொல்லுகின்ற இழிவினை
எட்டப்போக்கி இனிமைதேக்கி
எங்கும்தமிழே உயர்ந்ததென்று (கொட்டு)

திட்டம்போட்டு நமதுதமிழர் நாட்டினைத்
திருட்டுமுறையில் அடிமையாக்கும் கேட்டினைக்
கட்டிவீழ்த்தி மானங்காத்தல்
கடமை! தமிழர் கடமை! என்றே (கொட்டுவோம்)

வெட்டிப்பேச்சுப் பேசும்முறையை விட்டுமே
வீரவாழ்வு இன்றேல்சாவைத் தொட்டுமே
எட்டுத்திக்கும் புகழத்தமிழர்
இனிதுவாழ்வோம் என்றேகூறிக் (கொட்டுவோம்)

ஈரோட்டுப் பாதை

பழனி திருமாரன்

பாதை யொன்றே நல்ல பாதை—பெரியார்
பகுத்துணர்ந்தே சொல்லும்மேதை! ஈரோட்டுப்
(பாதை)

ஆதிதிராவிடத்தின் உரிமையைக் காக்கும்—தமிழ்
அன்னையின் கால்களில் விலங்கினை நீக்கும்!
விடுதலைப் (பாதை)

வார்தாப் பாதையிலே சென்றதினால்—அன்று
வாழிய பாரதமே! என்றதினால்,
சீர்கெட்டுப் போனோமே செந்தமிழா—இன்று
சிறுநரிக் கூட்டாட்சி! எந்தமிழா—தனியாட்சிப்
(பாதை)

நேருக்கு நேரிங்கே எவருமில்லை—என்றே
நீட்டியே முழக்கிடுவார் தவறுமில்லை!
ஆருக் கவர்காட்டுப் புத்தியிங்கே – பெரும்
அரசியல் தலைவருக்கி ருக்குதிங்கே? செப்புவீர்
(பாதை)

தேசப்பட எரிப்புப் போராட்டம் – வெற்றித்
தேர்வல மாட்சிக்கோர் வெள்ளோட்டம்!
வாசமலர்ச் சோலை சிறைச்சாலை – போற்றும்
வாழ்த்துப் பாமாலை சாவின்ஓலை! புரட்சிப் (பாதை)

வஞ்சித்தீரே!

விந்துவான், பா. முத்து

கரும்பனைய மொழிபேசிக் காதல் அத்தான்
கனியிதழின் சுவைமாந்திக் களித்தீர்; இன்றோ
இரும்பனைய உள்ளத்தால் என்னை ஏங்கி
இடர்க்கடலில் தத்தளிக்க விட்டீர்; என்றன்
அரும்பனைய இளமைதனை மலர்த்திப் பின்போ
அல்லல்தரும் மொழிசுமக்க விட்டு விட்டீர்;
பெரும்பனையில் இடிவீழ்ந்த நிலைமை ஏற்றுப்
பிதற்றுகிறேன்; பேதையெனை வஞ்சித் தீரே!

மையிருளில் தேடிவந்து நடுங்கும் என்னை
மடியிருத்தி ஏதேதோ சொன்னீர்; பின்பு
"மெய்யிறுக அணைத்தின்பம் துய்ப்போம்!" என்றே
மென்குரலால் உரைத்திட்டீர்; நானோ உன்றன்
கையிறுகப் பிடித்தெழுந்து முத்தம் ஈந்து
கடிமணத்தை முடித்ததனை முடிப்போம் என்றேன்
மொய்குழலே! நீஎதற்கும் அஞ்சேல்! என்ற
மொழிபசப்பி முடிவிலெனை வஞ்சித் தீரே!

மலைத்தோளின் எழில்கண்டு மலைத்துப்போனேன்
மகிழ்ச்சித்தேன் பெய்கின்ற உமது பேச்சே
நிலைத்ததென எண்ணிஏ மாந்தே போனேன்
நிலைகெட்டேன், கருவுற்றேன்; ஏங்கு கின்றேன்
வலைப்பட்ட மானாகி வருந்து கின்றேன்
வாழ்விழந்தேன் வளமிழந்தேன் பொய்ச் சமூகம்
நிலையறியா(து) எனைவீணே நிந்தை கூற
நெறிபிறழ்ந்தே ஏமாற்றி வஞ்சித் தீரே!

வஞ்சகர்கள் ஆடவர்கள், வாயின் வீச்சால்
வந்ததெலாம் உளறிவிட்டுப் பெண்ணி னத்தின்
நெஞ்சகத்தில் இன்பத்தை ஏற்றிக் கற்பின்
நிலைகுலைத்துச் சென்றிடுவார் என்ற உண்மை
அஞ்சுகமே எனக்கூறி அணைத்த போதே
அறியாமற் போனேனே! இனிஎன் செய்வேன்?
நஞ்சகத்தார் உலகத்தார் என்னைத் தூற்ற
நட்டாற்றில் கைவிட்டு வஞ்சித் தீரே!

படம் மறைந்தது!

சின்னாளப்பட்டி [வித்துவான் தா. குருசாமி]

வீட்டின் சுவரில் மாட்டி யிருந்த
படத்தை எடுத்தே உடைக்கச் சென்றேன்.
அன்னம் புலிபோல் பாய்ந்தே வந்தே
என்ன படமிதே? என்னவோ காரணம்?
என்றாள் வீட்டின் இன்பத் தலைவி!
படத்தில் உள்ளவர் யாரெனப் பார்ப்பாய்
மடவார் பலரும் அறிவா ரிவரை
என்று படத்தைக் காட்டினேன்—கண்டாள்!

ஆசிய சோதிமேல் அவ்வளவு சீற்றங்
கசியக் காரணம் என்ன? என்றாள்.
தந்தை மாட்டிய படமென் றெண்ணி
அந்தோ! இதுவரை விட்டுவைத் திருந்தேன்,
புத்தர் தோன்றல் திரு.வி. க.வொடு
கொத்தும் அடிமைத் தளையில் இட்டு
வாட்டும் இவர்படம் வீட்டி லிருந்தால்
நாட்டார் நகைப்பர்; நாணுவோம், என்றேன்.

விட்டுவைத் திருந்தீர் இதுவரை என்றாள்.
விட்டுவைத் திருந்தேன் பெரியவ ரென்று!
விட்டுவைத் திருந்தேன் காப்பா ரென்று!
தந்தை யவர்களை வெளியே றென்றார்
ஏதோ தூண்டுதல் என்றே எண்ணி
விட்டுவைத் திருந்தேன், விழித்தே னென்றேன்.
திராவிடர் தலைவனைத் திட்டிய ஞான்றே
இராமல் செய்க படத்தை என்றேன்,

தந்தையின் படமெனச் சொல்லி மழுப்பிக்
குந்திய படியே பேச்சை மறுத்தீர்;
தந்தை வைத்த படத்தை உடைக்க
இந்நாள் ஊக்கம் எவ்வா றெழுந்ததோ?
வண்டார் குழலியின் கிண்டலைப் போற்றிச்
சொல்லின் கிழத்தி! மன்னித் தருள்க.
இலங்கைத் தமிழன் இன்னலைக் கேட்டுக்
கலங்கா நெஞ்சன் கலங்கரை விளக்காம்!

இந்திய வரசு தலையிடா தென்றார்.
இலங்கையிற் சாவோ ரிந்திய ரல்லவோ?
விலங்கு கூட விழைந்திடும் உரிமையை!
விழையும் உரிமையை அறிவா லாய்ந்து
முறைப்படி செய்து முடிக்க லாற்றாது
குறைபடு கின்றார் தமிழரின் சூழ்ச்சியாம்!
ஆசிய சோதிய மாவாசை யானது.
தாய்முக நோக்குஞ் சேயே போல
ஓய்ந்து நோக்கும் ஈழமே உனக்குத்
தமிழகம் என்ன செய்யுமிவ் வேளை?
தன்கா லடிவாழ் மக்கள் சாக
எவரும் வாளா இருந்திடார் கண்ணே!
நம்மினப் பகைவன் நேருவா யிருப்பதால்
நம்மை ஒழிக்க நாள்பார்த் துள்ளார்?
நம்மை மதியான் படமேன் வேண்டும்?
படத்தை உடைக்க விலகுவாய் என்றேன்.

ஆடியும் சட்டமும் நன்குள ததனால்
இவன்படம் நீக்கித் திராவிடர் தலைவர்
தீந்தமிழ்ச் சிங்கம் பெரியா ருருவை
நிலைத்திட வைம்மின் என்றாள் அவளே!
சொலலும் பொருளும் செட்டாய்க் கொண்ட
மெல்லியல் சொற்படி படத்தை மாற்றி
வீட்டின் நடுவில் மாட்டியே விட்டேன்.
நேரிழை இசைத்தா ளணைத்தே
பெரியார் உங்களைத் திருத்துவா ரென்றே.

<□>

தமிழே! தமிழே!

பம்பாய், அமிழ்தன்

தமிழே! தமிழே! தரணி முதலே!
அமிழ்துள் அமிழ்தே! அணியுள் அணியே!
அரும்பா மலரே! அவிழா நறையே!
குரும்பை விடுத்த குளிரிள நீரே!
மழலை நகையே! மதமில் பிடியே!
குழல்யாழ் கொணராக் குரலே! குயிற்றமிழே!
செந்நெற் சுவையே! செழுங்கனிச் சாறே!
பொன்னிற் கொளியைப் புகலும் இயல்பினாய்!
மூவா மருந்தென முப்பால் வழங்கினாய்;
சாவாக் கலைகள் சமைத்து வளர்ந்தாய்;
புறத்தை அளித்தாய்; புகழை நிறைத்தாய்;
திறத்தை உணர்த்தச் சிலம்பொலி தந்தாய்,
கடலைக் கடந்தும் கமழ்மொழி சொன்னாய்;
புடவியர் ஏத்தப் புனைந்தாய், தொல் காப்பியம்
பண்ணுறை நாதம், பகலவன் பேரொளி,
தண்ணிறை தென்றல்-தரையில் இவைபோல
என்றும் இளையளாய் யார்க்கும் இனியளாய்
நின்று நிலவி நிலைத்தாய் நிலமிசை:
குன்றனை செல்வம் குறையறச் சேர்த்தெமக்கு
வென்றி தருவாய்: விழைவன ஈவாய்.
உயிரே! உணர்வே! உவகைத் தமிழே!
அயரோம்! உயர்வோம்! அறிகநீயே.

□ ❧ □

குயில்

Regd. No. M. 7030.

காதல்

பிழைத்தேனா? செத்தேனா?

நாம்வைத்த அன்பு மலையினும் பெரிதே
நம்தோழன் அன்பு கடுகினும் சிறிதே
(நாம்)

பாம்பொன்று சீறும்; தென்றலாம் அதன்பெயர்!
பழிபேசித் திரியும்; குயிலாம் அதன்பெயர்!
தேம்பி அழவைத்தான் மாலைச் சுடுகாட்டில்
திறங் கெட்டுப்போகுமா முகம் காட்டிப்போனால்
(நாம்)

கண்ணிருந் தும்உடல் மரத்தினில் மோதும்
காதுகள் இருந்தும் கேட்கிலேன் யாதும்!
பெண்ணிருந் தேன்பெறும் பேறென்ன பெற்றேன்?
பிழைத்தேனா செத்தேனா வந்தானா அவன்றான்?
(நாம்)

மார்பின் பூச்சோ எனஎண்ணும் மூக்கு;
வண்டுசொற்படி அது முல்லையின் தாக்கு!
தேரின் மணியோ என்னும்என் நெஞ்சம்;
சிட்டுக்கள் அப்படி அல்லவா கொஞ்சும்!
(நாம்)

பன்முறை அல்ல, ஒருநொடி விருந்து
பழந்தமிழ்! ஒருசொல்! என் சாவாமருந்து
பொன்னுடல் காதல் தணலால் உருகிற்றே
பூவிதழ் அவனைக் காணாது கருகிற்றே
(நாம்)

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா, தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.